தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 228 | 4 Pages | 16.3.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 228 | 4 பக்கங்கள் | 16.3.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல**

**விளக்கம்:**
**அறிவில்லாதவர் ஒரு வேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை.ஆனால்வீணீல்எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள்.**

## பிரதமர் மோடி அடுத்த மாதம் இலங்கை பயணம்

டெல்லி, மார்ச்.16



பிரதமர் மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்கிறார். அடுத்த மாத தொடக்கத்தில் இலங்கை செல்லும் பிரதமர் மோடி அந்நாட்டு அதிபர் அனுர குமார திசநாயக, பிரதம மந்திரிகலாநிதிஹரிணிஅமரசூரியா உள்ளிட்டோரை சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

இந்த பயணத்தின்போது இந்திய நிதி உதவியுடன் திரிகோணமலை மாவட்டம் சம்பூரில் அமைக்கப்பட்டுள்ள சோலார் மின்நிலையத்தை பிரதமர்மோடி திறந்து வைக்கிறார். 2015ம் ஆண்டு முதல் இலங்கைக்கு பிரதமர் மோடி மேற்கொள்ளும் 4வது பயணம் இதுவாகும்.

## இந்தியை ஒருபோதும் எதிர்க்கவில்லை; கட்டாயமாக்குவதை மட்டுமே எதிர்த்தேன் பவன் கல்யாண்

அமராவதி, மார்ச்.16

மத்திய அரசின் மும்மொழி கொள்கைக்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் லாப நோக்கத்துக்காக தமிழ் படங்களை இந்தியில் டப்பிங் செய்வதை மட்டும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், ஏன் அனுமதிக்கிறார்கள்? என்று ஜனசேனா கட்சியின் தலைவரும், ஆந்திர துணை முதல்மந்திரியுமான பவன் கல்யாண் கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக நேற்று தனது ஜனசேனா கட்சியின் 12வது ஆண்டு விழாவில் பேசிய அவர், "தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தங்களின் திரைப்படங்களை பணத்துக்காக இந்தியில் டப்பிங் செய்ய கூறிவிட்டு இந்தியை எதிர்ப்பது ஏன்? பாலிவுட்டில் இருந்து பணத்தை விரும்பும் அவர்கள் இந்தியை மட்டும் ஏன் ஏற்க மறுக்கின்றனர்?" என்று பேசியிருந்தார்.

இந்த நிலையில், இந்தியை ஒருபோதும் எதிர்க்கவில்லை என்றும், இந்தியை கட்டாயமாக்குவதை மட்டுமே எதிர்த்ததாகவும் பவன் கல்யாண் விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

தேசிய கல்விக் கொள்கையின்படி, மாணவர்கள் ஒரு வெளிநாட்டு மொழியுடன், இரண்டு இந்திய மொழிகளை (அவர்களின் தாய்மொழி உட்பட) கற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

அவர்கள் இந்தி படிக்க விரும்பவில்லை என்றால், தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், மராத்தி, சமஸ்கிருதம், குஜராத்தி, அஸ்ஸாமி, காஷ்மீரி, ஒடியா, பெங்காலி, பஞ்சாபி, சிந்தி, போடோ, டோக்ரி, கொங்கனி, மைதிலி, மெய்தி, நேபாளி, சந்தாலி, உருது அல்லது வேறு எந்த இந்திய மொழியையும் தேர்வு செய்யலாம்.

மும்மொழிக் கொள்கை என்பது மாணவர்களுக்கு விருப்பத்தேர்வை வழங்கவும், தேசிய ஒற்றுமையை ஊக்குவிக்கவும், இந்தியாவின் வளமான மொழியியல் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கைக்கு அரசியல் நோக்கங்களுக்காக தவறாக பொருள் கூறுவதும், பவன் கல்யாண் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார் என்று கூறுவதும் தவறான புரிதலின் வெளிப்பாடாகும்."

இவ்வாறு பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

## மூடநம்பிக்கையின் உச்சம்: ஆவி புகுந்துள்ளதாக தீயின்முன் கட்டி தொங்கவிடப்பட்ட 6 மாத குழந்தை; கண் பார்வை பாதிப்பு

போபால், மார்ச்.16

மத்தியபிரதேச மாநிலம் சிவ்புரி மாவட்டம் கொலரஸ் பகுதியை சேர்ந்த தம்பதிக்கு ஆண் குழந்தை உள்ளது.

6 மாதமான அந்த குழந்தைக்கு கடந்த சில நாட்களுக்குமுன் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. உடல்நலக்குறைவு காரணமாக குழந்தை அழுதுகொண்டே இருந்துள்ளது. ஆனால், குழந்தையை மருத்துவமனைக்குஅழைத்து செல்லாமல்பெற்றோர்அதேகிராமத்தை சேர்ந்த ராகவீர் தடக் என்பவரின் வீட்டிற்கு கொண்டு சென்றுள்ளனர். தன்னை மாந்திரீகன் என்று கூறிக்கொண்ட ராகவீர் தடக், குழந்தையின் உடலில் ஆவி புகுந்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்த மூடநம்பிக்கையை நம்பிய தம்பதி, குழந்தையின் உடலில் புகுந்துள்ள ஆவியை வெளியேற்றுமாறு ராகவீர் தடக் இடம் கூறியுள்ளனர்.

இதையடுத்து, நேற்று முன் தினம் வீட்டில் செங்கல்களை அடுக்குவைத்து அதில் விறகுகள் கொண்டு தீ வைத்துள்ளார். பின்னர், பெற்றோர் கண் எதிரே அந்த தீயின் முன் பச்சிளம் குழந்தையை ராகவீர் தடக் கட்டி தொங்க விட்டுள்ளார்.

தீயின் முன் கட்டி தொங்கவிடப்பட்ட பச்சிளம் குழந்தை தீயின் வெப்பத்தால் அலறி துடித்துள்ளது. இந்த சம்பவத்தில் பச்சிளம் குழந்தையின் கண் பகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, குழந்தையை நேற்று சிவ்புரி மாவட்ட மருத்துவமனைக்கு பெற்றோர் கொண்டு வந்துள்ளனர். குழந்தையின் கண் பகுதியில் கடுமையாக பாதிப்பு இருந்ததை கண்ட டாக்டர்கள் இது குறித்து பெற்றோரிடம் விசாரித்துள்ளனர்.

அப்போது, மூடநம்பிக்கையில் குழந்தையை தீயின்முன் கட்டி தொங்கவிட்டதைபெற்றோர்கூறினர்.இதைக்கேட்டுஅதிர்ச்சியடைந்த மருத்துவ ஊழியர்கள் குழந்தைக்கு தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர். குழந்தையின் கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பார்வையை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். குழந்தையின் கண் பார்வை குறித்து 2 நாட்களுக்குப்பின்தான் தெரியவரும் என்று கூறினர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசில் தெரிவிக்கப்பட்டது. தகவலறிந்து வந்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்வேறு முத்தான திட்டங்களுடன் வேளாண் பட்ஜெட்: வாழ்த்து தெரிவித்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச்.16

2025, 2026ம் ஆண்டுக்கான தமிழக வேளாண்மை பட்ஜெட்டை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சட்டசபையில் தாக்கல் செய்தார்.

இந்நிலையில் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் அதிகாரிகளுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

நமது வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வு மேம்படும் வகையில்,

வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவித்தொகை அதிகரிப்பு,

முதல்அமைச்சரின்1,000உழவர் நலச் சேவை மையங்கள்,

புதிய தொழில்நுட்பங்கள்,

சிறு குறு விவசாயிகள் நலன்,

மலைவாழ்உழவர்முன்னேற்றத் திட்டம்,

டெல்டா அல்லாத மாவட்ட நெல் விவசாயிகளுக்குச் சிறப்புத் தொகுப்புத் திட்டம்,

வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டும் அலகுகள் அமைக்க நிதியுதவி

எனப் பல்வேறு முத்தான திட்டங்களுடன் 45,661 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்று தமிழ்நாடுவேளாண்மைபட்ஜெட் 2025 வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை அதிகாரிகள் அனைவர்க்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## லயோலா கல்லூரியில் "GST in Tally" கருத்தரங்கம் மற்றும் டேலி சான்றிதழ் வழங்கல் விழா



திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம்:திருவண்ணாமலை மாவட்டத்தின் வேட்டவலத்தில் அமைந்துள்ள லயோலா கல்லூரி (NAACஆல் B+ தரத்துடன் அங்கீகரிக்கப்பட்டது) வணிகவியல் துறையின் சார்பில் "GST in Tally" என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் டேலி சான்றிதழ் வழங்கல் விழா மார்ச் 14, 2025 அன்று கல்லூரியின் அரங்கமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்கான நிகழ்வு

இக்கருத்தரங்கம் மாணவர்களின் தொழில் திறனை மேம்படுத்த மற்றும் ஜிஎஸ்டி (GST) மற்றும் டேலி மென்பொருள் குறித்த அறிவைப் பெருக்கும் நோக்கத்துடன் நடைபெற்றது. இந்நிகழ்வில்,

ஜிஎஸ்டி நடைமுறைகள், பதிவு, ஈவே பில் மற்றும் ஈஇன்வாய்ஸ் தொடர்பான விவரங்கள் பகிரப்பட்டன.

டேலி பிரைம் மென்பொருளில் ஜிஎஸ்டி கணக்கியல் செயல்பாடுகள் எப்படி செயல்படுகின்றன என்பதற்கான பயிற்சி வழங்கப்பட்டது.

மாணவர்களின் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்த டேலி பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களின் பங்களிப்பு

இந்நிகழ்வில் டேலி எஜுகேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மண்டல மேலாளர் திரு. எம். மெய்யப்பன் காந்தி, டேலி பயிற்சி மையம் TAC, திருவண்ணாமலை இயக்குநர் டாக்டர். எம். ராஜசேகர், மற்றும் டேலி பயிற்சியாளர் திருமதி. ஆர். சரஸ்வதி (ஆர்.எஸ் கம்ப்யூட்டர்ஸ்) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ஜிஎஸ்டி கணக்கியல் நடைமுறைகள், தொழில் துறையில் டேலியின் பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் குறித்து மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆர்வம் மற்றும் நிர்வாகத்தின் பாராட்டு

வணிகவியல் துறைத் தலைவர் டாக்டர். சிவக்குமார் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர். முதல்வர் தனது உரையில், "இந்நிகழ்வு மாணவர்களின் தொழில் திறனை வளர்த்துவிடும். தற்போதைய தொழில் சூழலில் ஜிஎஸ்டி மற்றும் டேலி மென்பொருள் அறிவு மிக முக்கியம்" எனக் குறிப்பிட்டார்.

மாணவர்களின் நிகழ்நிலை அனுபவம் மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், லயோலா கல்லூரி தொடர்ந்து இத்தகைய பயனுள்ள கருத்தரங்கங்களை நடத்தும் என நிர்வாகம் அறிவித்துள்ளது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கல்லூரி நன்றி தெரிவித்துள்ளது.

## பாண்டிபஜார் பகுதியில் பெண் பழவியாபாரியின் கடையை சேதப்படுத்தி கொலை முயற்சி செய்து பணம் பறித்த 4 குற்றவாளிகளுக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு







சென்னை, தி.நகர் பகுதியில் வசித்து வரும் அல்லி, பெ/52, க/பெ.அய்யனார் என்பவர், கடந்த 01.05.2023 அன்று மதியம் தி. நகர், வடக்கு உஸ்மான்சாலையில் நடைபாதையில் உள்ள பழக்கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த வெங்கடேசன் மற்றும் 3 நபர்கள் அல்லியிடம் உனது கணவர் எங்கே? எனக்கு தர வேண்டிய பணத்தை கொடு எனக் கேட்டு, அல்லியிடம் தகராறு செய்து, தாங்கள் வைத்திருந்த கத்தியால் அல்லியை தாக்க முற்பட்டபோது, அல்லி சற்று ஒதுங்கிடவே, காயம் ஏற்படவில்லை. உடனே 4 நபர்களும் கடையிலிருந்த பொருட்களை உடைத்து, அல்லி வைத்திருந்த பணம் ரூ.1,000/ஐ பறித்துக் கொண்டு ஆட்டோவில் தப்பிச் சென்றனர். மேற்படி சம்பவம் குறித்து அல்லி, R4 சௌந்தரபாண்டியனார் அங்காடி காவல்நிலையத்தில்புகார்கொடுத்ததின்பேரில், கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவுசெய்து எதிரிகள் 1.வெங்கடேசன், வ/35, த/பெ.மோகன், பள்ளிக்கரணை, 2.சீனிவாசன், வ/38, த/பெ.ஏழுமலை, மேற்கு மாம்பலம், 3.வினோத், வ/31, த/பெ. கிருஷ்ணா ரெட்டி, மேற்கு மாம்பலம், 4.மணிவண்ன் (எ) செந்தில், வ/42, த/பெ.லோகநாதன், மேற்கு மாம்பலம் ஆகிய 4 நபர்களை கைது செய்தனர். எதிரிகளிடமிருந்து பணம் ரூ.1,000/, 1 ஆட்டோ மற்றும் 2 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது.

R4 சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் கண்ணன் தலைமையிலான உதவி ஆய்வாளர்கள் செல்வராசு, பிரவின் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் உள்ள 19வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் நேற்று (14.03.2025) தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், 1. வெங்கடேசன், 2.சீனிவாசன், 3.வினோத், 4.மணிவண்ணன் (எ) செந்தில், ஆகிய 4 எதிரிகளுக்கு தலா 04 வருடங்கள் சிறை தண்டனை விதித்து கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தந்த R4 சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# பள்ளி பெயர்களில் உள்ள சாதிப்பெயர்களை நீக்குவது தொடர்பான வழக்கில் தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை, மார்ச்.16

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை நிர்வகிக்க சிறப்பு அதிகாரியை நியமதித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், சாதியை ஊக்கப்படுத்தும் சங்கங்களை சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடியுமா என்பது குறித்தும் பள்ளிகளின் பெயர்களில் உள்ள சாதிகளின் பெயர்களை நீக்க முடியுமா என்பது குறித்தும் விளக்கமளிக்குமாறு அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு, நீதிபதி பரத சக்கரவர்த்தி முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு தரப்பில், இந்த வழக்கின் கோரிக்கைக்கும் நீதிமன்றம் எழுப்பியுள்ள கேள்விகளுக்கும் தொடர்பில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சாதி சங்கங்களை பதிவு செய்வது தொடர்பாகவும், பள்ளிகளில் பெயர்களில் உள்ள சாதி பெயர்களை நீக்குவது தொடர்பான வழக்கின் தீர்ப்பை நீதிபதி தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டார்.



# ஓட்டி பழகியபோது விபரீதம் 60 அடி கிணற்றில் காருடன் விழுந்து விவசாயி பலி ; மீட்க சென்றவரும் சாவு: 9 மணி நேர போராட்டத்திற்கு பின் சடலம் மீட்பு

சத்தியமங்கலம், மார்ச்.16

சத்தியமங்கலம் அருகே 60 அடி கிணற்றில் காருடன் விவசாயி உயிரிழந்த நிலையில், சடலத்தை மீட்க கிணற்றுக்குள் குதித்த மீனவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தார். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள செண்பகப்புதூர் ஊராட்சிக்கு உட்பட்ட முள்ளிக்காபாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவக்குமார் (எ) யுவராஜ் (48). விவசாயியான இவருக்கு கௌரி என்ற மனைவியும் ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தையும் உள்ளனர்.

இவர் குடும்பத்துடன் தனது விவசாய தோட்டத்து வீட்டில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் மாலை சிவக்குமார் தனது உறவினர் காரை ஓட்டி பழகி உள்ளார். அப்போது கட்டுப்பாட்டை இழந்து கார் வீட்டின் முன்பு இருந்த 60அடி ஆழகிணற்றுக்குள் கவிழ்ந்து நீருக்குள் மூழ்கியது. இதில் மூச்சுத்திணறி சிவக்குமார் உயிரிழந்தார். தகவலறிந்து வந்த சத்தியமங்கலம் தீயணைப்பு துறையினர், காரையும், சிவகுமாரையும் கிரேன் இயந்திரம் மூலம் மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

கிணற்றில் சுமார் 40 அடி ஆழத்திற்கு தண்ணீர் இருந்ததால் தீயணைப்பு வீரர்கள் நீருக்குள் மூழ்கி காரை மீட்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து மின் மோட்டார்கள் கொண்டு வரப்பட்டு நீரை இறைக்கும் பணி நடைபெற்றது. மீட்பு பணிக்காக பவானிசாகர் அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த மீனவர் மூர்த்தி (42) என்பவர் வந்திருந்தார். அவர் கிணற்று நீரில் மூழ்கி மீட்க முயற்சித்தபோது அவரும் மூச்சுத் திணறி உயிரிழந்தார். இதைத்தொடர்ந்து நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் கிணற்றில் இருந்த தண்ணீர் முழுவதும் மோட்டார்கள் மூலம் இறைக்கப்பட்டு 9 மணி நேரம் போராடி கார் மற்றும் இருவரது சடலங்களும் கிரேன் இயந்திரம் மூலம் மீட்கப்பட்டது. இதையடுத்து போலீசார் இரு உடல்களையும் பிரேத பரிசோதனைக்காக சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



# சமரசமில்லா இருமொழி கொள்கை: கடைக்கோடி கிராமத்திற்கும் மின்வசதி

சென்னை, மார்ச்.16

தமிழக அரசின் பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது: பெருந்தொழிற்சாலைகள் மின் உற்பத்தியை பெருக்கி கொண்டிருந்த காலத்தில் கடைக்கோடி குக்கிராமங்களுக்கும் மின் வசதி குறித்து சிந்தித்தவர்கள் நாம். ஏழை, எளிய, நகர்புற மக்களுக்கு பன்னடுக்கு குடியிருப்புகளை உருவாக்க தனி வாரியம் அமைக்கப்பட்டதும் இங்குதான். மகளிருக்கும் வாக்குரிமை வழங்கியதில் முன்னோடியான நமது மாநிலம் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியதிலும் முன்னணி மாநிலமாகும். எவ்வித சமரசத்திற்கும் இடம் தராமல் இரு மொழி கொள்கையை தமிழ்நாடு தொடர்ந்து பின்பற்றுவதால் தமிழ் பண்பாட்டை பாதுகாத்தது மட்டுமல்லாமல் ஆங்கிலத்தின் துணையோடு உலகை வெல்லும் தணியாத தாகம் கொண்டு நமது இளைஞர்கள் வலம் வருகிறார்கள்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இலவச கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அரசு அறிவிப்பு

ராமேஸ்வரம், மார்ச்.16

ராமேஸ்வரத்திலிருந்து, கடந்த பிப். 22ம் தேதி, கடலுக்குச் மீன்பிடிக்கச் சென்ற சேசுராஜா, வியாகுலம், ஆரோக்ய மண்ட்ரோ, கோபால் ஆகியோருக்குச் சொந்தமான நான்கு விசைப்படகுகளையும், அதிலிருந்த 28 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். இதனைத்தொடர்ந்து மீனவர்கள் தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களின் காவல் நேற்று நிறைவடைந்ததை தொடர்ந்து, மீண்டும் தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதி, 28 மீனவர்களுக்கும் இலங்கை மதிப்பில் தலா ரூ.2.50 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். இது இந்திய மதிப்பில் மொத்தம் ரூ.20.50 லட்சம் ஆகும். அபராத தொகை கட்டிய பின் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு: தனித் தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, மார்ச்.16

தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுக்கு தனித் தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம் என அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது. மே, ஜூன் 2025ல் நடைபெறவுள்ள தொடக்கக் கல்வி பட்டயத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையம் வழியாக விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, ஏற்கனவே தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களின் அனைத்து நகல்களையும் இணைத்து தேர்வர் வசிக்கும் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக மார்ச் 18ம் தேதி முதல் மார்ச் 24ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். அங்கேயே தேர்வுக் கட்டணத்தினையும் செலுத்த வேண்டும். மேல் குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறியவர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தில் (தட்கல்) மார்ச் 25, 26ஆகிய தேதிகளில் சிறப்பு கட்டணமாக ரூ. 1000 செலுத்தி விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னை அரசு பஸ்சில் ரூ.25 லட்சம் ஹவாலா பணம்: வாலிபரிடம் போலீஸ் விசாரணை

கடலூர், மார்ச்.16

கடலூர் மாவட்ட எஸ்பி ஜெயக்குமாரின் தனிப்படை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் செந்தில் தலைமையிலான போலீசார் நேற்று கடலூர் ஆல்பேட்டை சோதனை சாவடியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சென்னையில் இருந்து கடலூர் நோக்கி வந்த ஒரு அரசு பேருந்தை நிறுத்தி அதில் இருந்த பயணிகளிடம் சோதனை நடத்தினர்.

அதில் வந்த தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் பகுதியைச் சேர்ந்த முகதூம் மகன் அகமது லிபாய் (23) என்ற வாலிபரின் பையில் ரூ.25 லட்சம் கட்டுக்கட்டாக பணம் இருந்தது. ஆனால் அதற்கான உரிய ஆவணங்கள் இல்லை. இதையடுத்து போலீசார் அந்த ஹவாலா பணம் குறித்து அந்த வாலிபரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை வருமான வரி துறையிடம் போலீசார் ஒப்படைத்துள்ளனர்.

# போடி பகுதியில் பீட்ரூட் அறுவடை தீவிரம்: விலை குறைவால் விவசாயிகள் கவலை

போடி, மார்ச்.16

போடி சுற்றுவட்டாரப் பகுதி விவசாய நிலங்களில் பீட்ரூட் அறுவடை தீவிரமடைந்துள்ளது. மேலும் மொத்த வியாபாரிகளும் நேரடியாக வந்து கொள்முதல் செய்து லாரிகளில் ஏற்றிச் செல்கின்றனர். தேனி மாவட்டம், போடியை சுற்றியுள்ள அம்மாபட்டி, சுந்தரராஜ்புரம், பெருமாகவுண்டன் பட்டி, தர்மத்துப்பட்டி, சில்லமரத்துப்பட்டி, சிலமலை, சூலப்புரம், ராசிங்காபுரம், நாகலாபுரம், மாணிக்காபுரம், கரையாம்பட்டி என பல கிராமங்களில் குறுகிய கால பயிராக பீட்ரூட் அறுவடை செய்யப்பட்டிருந்தது. நிலத்தடி நீர் பாசனத்தில் ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் வரை செலவு செய்து விவசாயிகள் சாகுபடி செய்தனர். இந்த நிலையில் 70 நாட்களில் பீட்ரூட் அறுவடைக்கு தயாராகியுள்ளது. இதையடுத்து அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் மூட்டைகளாக கட்டி வைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

அதேவேளையில் மொத்த வியாபாரிகளும் நிலங்களுக்கு நேரடியாக வந்து விலை பேசி பீட்ரூட்டை தேர்வு செய்து மூட்டைகளாக கட்டி சரக்கு வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். உடல் நலனுக்கும், ரத்த விருத்திக்கும் முக்கிய காய்கறிகளில் ஒன்றாக மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவதால் சந்தையில் பீட்ரூட்டுக்கு தேவை அதிகமாக உள்ளது. இதனால் வியாபாரிகளும் பீட்ரூட்டை அதிகளவில் வாங்கிச் செல்ல ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆனால், தற்போது உற்பத்தி அதிகரித்துள்ளதால் விலை குறைவாகவே உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், “பருவமழையின் போது அதிக மழை பெய்ததால் நிலத்தடி பாசனத்தில் போதுமான நீர் பயிர்களுக்கு கிடைத்தது. இதனால் பீட்ரூட்கள் நன்கு செழிப்பாக வளர்ந்துள்ளன. உற்பத்தியும் அதிகரித்துள்ளது. ஆனால் சாகுபடிக்கு ரூ.60 ஆயிரம் வரை செலவழித்த நிலையில் போதுமான விலை கிடைக்கவில்லை. இதனால் குறைவான விலைக்கே வியாபாரிகளிடம் விற்க வேண்டியுள்ளது’’ என்றனர்



# என்எல்சி அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

நெய்வேலி, மார்ச்.16

கடலூர் மாவட்டம் நெய்வேலியில் என்எல்சி இந்தியா நிறுவனம் ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகிறது. என்எல்சி இந்தியா நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு நேற்று ஒரு மின்னஞ்சல் வந்தது. அதிகாரிகள் பார்த்தபோது தலைமை அலுவலகத்திற்கு வெடிகுண்டு வைத்துள்ளோம் என குறிப்பிட்டிருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த என்எல்சி அதிகாரிகள் இதுகுறித்து மாவட்ட எஸ்பி அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து கடலூரில் இருந்து வரவழைக்கப்பட்ட கைரேகை மற்றும் மெட்டல் டிடெக்டர் கருவிகளுடன் வெடிகுண்டு நிபுணர்கள் ஒவ்வொரு பகுதியாக சோதனை செய்தனர். இறுதியாக என்எல்சி தலைமை அலுவலகத்தில் வெடிகுண்டுகள் எதுவும் இல்லை என தெரியவந்தது. மேலும் நிர்வாக அலுவலகம், பீல்ட் ஆபீஸ், அனல் மின் நிலையம் போன்ற இடங்களிலும் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை செய்தனர். இதையடுத்து வெடிகுண்டு மிரட்டல் வதந்தி என தெரியவந்தது. மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தவர் யார்? என போலீசார் தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்.



# போக்குவரத்து காவல் அதிகாரிகள், ஆளிநர்களுக்கு காகித கூழ் தொப்பிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார் சென்னை காவல் ஆணையாளர்

சென்னை, மார்ச்.16

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு, கோடை வெயில் தாக்கத்தை சமாளிப்பதற்காக மோர் மற்றும் காகித கூழ் தொப்பிகள் (Pith Hat) வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

கோடை காலத்தில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் தாகத்தை தணிக்க போக்குவரத்து காவல் ஆளிநர்களுக்கு 2012ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான நான்கு மாதங்கள் ஆவின் மோர் வழங்கும் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண் இன்று (14.03.2025) காலை, போர் நினைவுச்சின்னம் அருகில் போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு ஆவின் மோர் பாக்கெட்டுகள் வழங்கி 2025ம் ஆண்டிற்கான மோர் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார். மேலும், கோடை வெயிலின் தாக்கத்தை சமாளிப்பதற்காக போக்குவரத்து காவல் ஆளிநர்களுக்கு பித் ஹேட் (Pith Hat) காகித கூழ் தொப்பிகளை வழங்கினார்கள்.

ஆவின் மோர் வழங்கும் திட்டத்திற்காக, ஒரு மோர் பாக்கெட் ரூ.6.33 வீதம் நாளொன்றுக்கு 4,864 மோர் பாக்கெட்டுக்கு ரூ.30,789/ என 120 நாட்களுக்கு ரூ.37,56,273/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவலர்களுக்கு காலை மாலை என இரு வேளையும் மோர் வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அனைத்து காவல் மாவட்டங்களிலும் போக்குவரத்து காவல் அதிகாரிகள். சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு மோர் மற்றும் பித் ஹேட் (Pith Hat) காகித கூழ் தொப்பிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையாளர் R.சுதாகர், போக்குவரத்து காவல் இணை ஆணையாளர் (தெற்கு) பண்டி கங்காதர், போக்குவரத்து காவல் துணை ஆணையாளர்கள், காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.



# எம்பி தொகுதி சீரமைப்பை ஏற்கமாட்டோம் தமிழக அரசு எடுக்கும் முயற்சிக்கு முழு ஆதரவு: பிரேமலதா உறுதி

‘நாடாளுமன்ற தொகுதி சீரமைப்பை ஏற்கமாட்டோம். தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஆதரவு அளிப்போம்’ என பிரேமலதா தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் தேமுதிக துணை பொதுச்செயலாளர் பார்த்தசாரதியின் 60ம் ஆண்டு மணிவிழா நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா நிருபர்களுக்கு அளித்த பேட்டி: தமிழக அரசு கூட்டிய அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்ததை தொடர்ந்து அதில் கலந்து கொண்டோம். நாடாளுமன்ற தொகுதி சீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு தொகுதிகளை குறைத்து தமிழகத்தை வஞ்சிக்க நினைக்கிறது. அதை ஒரு போதும் தேமுதிக ஏற்காது. இதுதொடர்பாக தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு தேமுதிக முழு ஆதரவு அளிக்கும். தேமுதிக தலைவர் விஜயகாந்த் அன்னை தமிழை காப்போம், அனைத்து மொழியும் கற்போம் என்ற கொள்கையை வலியுறுத்தினார். அதையே நாங்களும் வலியுறுத்துகிறோம். தமிழக பட்ஜெட் குறித்து முழுமையாக படித்து அறிக்கை வெளியிடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருந்த காவல்துறையினருக்கான இலவச பேருந்து பயண அட்டை

இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறை சார்பில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருந்த காவல்துறையினருக்கான இலவச பேருந்து பயண அட்டையை (Free Bus Pass) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தர் சுக்லா, இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறையினருக்கு வழங்கினார்.

காவல்துறையினரின் கோரிக்கையை ஏற்று காவலர் முதல் ஆய்வாளர் வரை அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் பிரத்தியேக பயண அட்டையை பயன்படுத்தி அரசு பேருந்துகளில் தாங்கள் பணி செய்யும் மாவட்டத்திற்குள் பணிநிமித்தமாக இலவசமாக பயணம் செய்யலாம் என்றும், இதற்காக நவீன அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருந்தார். அதன்படி இராணிப்பேட்டை மாவட்டத்தில் பணிபுரியும் 891 நபர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட இலவச பேருந்து பயண அட்டையினை (Free Bus Pass) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா, காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு வழங்கினார்.



# டாஸ்மாக்கில் ரூ.1,000 கோடி முறைகேடு; அமலாக்கத்துறை குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இல்லை செந்தில் பாலாஜி

சென்னை, மார்ச்.16

டாஸ்மாக் கடைப்பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அனைத்தும் சரியான முறைகளின்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"சென்னை அமலாக்க இயக்குநரகம் 06032025 அன்று சென்னையில் உள்ளடாஸ்மாக்தலைமை அலுவலகம் உட்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியது.

அதில் 13032025 அன்று மாலை சோதனை தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பில் பல்வேறு முதல் தகவல் அறிக்கைகள், பல்வேறு பிரிவுகளில் பதியப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில், எந்த முதல் தகவல் அறிக்கை எந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரங்கள் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை.

கடைப்பணியாளர்களின் பணியிட மாறுதல் உத்தரவுகள், அவர்களின் குடும்ப சூழ்நிலை, மருத்துவ காரணங்கள், பணியில் தவறு செய்யும் பணியாளர்களை விடுவித்து அப்பணியிடங்களுக்கு மாற்றுப் பணியாளர்களை நியமித்தல், மனமொத்த மாறுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மூடப்பட்ட கடைகளில் பணியாற்றிய 2,157 கடைப்பணியாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டு கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சரியான முறைகளின்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போக்குவரத்து ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி 2023ல் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் நடைமுறைபடுத்தப்பட்டது. KYC விவரங்கள், வங்கி வரைவோலைகள் உள்ளிட்ட விண்ணப்பதாரர்களின் அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்ட பின்பே ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் நிறுவனத்திற்கும் மற்றும் அரசிற்கும் வரவேண்டிய வருவாய் கணக்கிடப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சில போக்குவரத்து ஒப்பந்தம் தொடர்பான வழக்குகள் மாண்பமை சென்னை ஐகோர்ட்டில்நிலுவையில் உள்ளன. எனவே இதில் முறைகேடுகள் எதுவுமில்லை.

கடந்த காலங்களில் நடைபெற்ற மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. ஒவ்வொரு மதுக்கூடத்திலும் குறுமத் தொகை (Upset Price) முறையாக நிர்ணயிக்கப்பட்டு குறுமத் தொகைக்கு மேல் கூடுதலாக கேட்கப்படுபவர்களுக்கு மதுக்கூட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 20202021 ஆம் ஆண்டு நடைபெற்ற மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் நடைபெற்றன.

2023 டிசம்பர் மாதம் மாவட்ட மேலாளரால் மதுக்கூட ஒப்பந்தங்கள் இணையவழி மூலமாக வரவேற்கப்பட்டு, அந்தந்த மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது), உதவி ஆணையர் (கலால்) மற்றும் மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் அடங்கிய மாவட்ட கலெக்டரால் அமைக்கப்பட்ட கூராய்வுக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மாவட்ட கலெக்டர் மற்றும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டன.

இதுவரை இணையவழி மூலமாக மதுக்கூட ஒப்பந்த நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ளன.

சட்ட விதிகளுக்கு உட்பட்டே ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இந்த முறை மூலம் டாஸ்மாக் நிறுவனத்தின் வருவாய் அதிகரித்துள்ளது.

டாஸ்மாக் ஒரு வணிக நிறுவனம். வணிகநோக்கில் மதுபான நிறுவனங்களிடமிருந்து உயரதிகாரிகளுக்குப் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், அக்கோரிக்கைகள் சட்ட, திட்ட விதிமுறைக்களுக்குட்பட்டே பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டாஸ்மாக் நிறுவனத்தில் எவ்வித பாரபட்சமும் இன்றி உரிய வழிமுறையின் (Formula) அடிப்படையில் ஒவ்வொரு மதுபான வகையின் மூன்று மாத விற்பனை அளவினை கணக்கிட்டும், அவற்றுடன் கடைசி மாத விற்பனை அளவினை கணக்கிட்டும், அதனடிப்படையிலான கொள்முதல் வெளிப்படையான இணையவழியில் உரிய வழிமுறையில் மட்டுமே வழங்கப்படுகிறது.

மதுபானஉற்பத்தியாளர்கள் மற்றும் மதுபுட்டிகள் தயாரிப்பு நிறுவனங்களுக்கிடையே (Bottling Companies)ல் பணபரிமாற்றங்கள் நடைபெற்றதாக தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் அந்த இரு நிறுவனங்களுக்கு இடையேயானது எனினும், இந்த பணப்பரிமாற்றங்களைப் பயன்படுத்தி தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிறுவனத்திடம் இருந்து கூடுதல் கொள்முதலைப் பெற்றதாக தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும், இதில் ரூபாய் 1,000 கோடி முறைகேடு நடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை.

இவ்வாறு உள்நோக்கத்தோடு ஆதாரங்கள் ஏதுமின்றி முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுப்பதோடு, இது தொடர்பான சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்."

இவ்வாறு அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

# சபாநாயகர் மீது அதிமுக கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானம்: சட்டசபையில் நாளை வாக்கெடுப்பு

சென்னை, மார்ச்.16

சபாநாயகர் அப்பாவு மீது எதிர்கட்சியான அதிமுக ஏற்கனெவே சட்டசபை செயலாளர் சீனிவாசனை சந்தித்து நம்பிக்கையில்லா தீர்மானம் கொடுத்து இருந்தது. இந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தை எடுத்துக் கொள்வது தொடர்பாக சபாநாயகர் அப்பாவு கூறியதாவது:



அதிக நேரம் பேச அனுமதிக்கவில்லை, பேசுவதை தொலைகாட்சியில் காட்டவில்லை என நம்பிக்கை இல்லா தீர்மானம் அதிமுக சார்பில் கொண்டு வந்துள்ளனர். இதற்கு ஏற்கனவே பதில் அளித்து உள்ளோம். யார் பேசுவதையும் காட்ட கூடாது என குறுகிய எண்ணத்துடன் இந்த அரசு செயல்படவில்லை. கடந்த முறை டெக்னிக்கல் பிரச்சினை என சட்டமன்றத்தில் பதில் அளித்து உள்ளேன். இனி அப்படி ஒன்றும் நடைபெறாது. நம்பிக்கை இல்லா தீர்மானம் தொடர்பாக 17ம் தேதி (திங்கள்கிழமை) பேரவையில் எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அன்றைய தினம் சட்டசபையில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது விவாதம் நடக்கும்போது சபாநாயகர் அப்பாவு அவரது இருக்கையில் இருக்கமாட்டார். அந்தநேரத்தில் துணைசபாநாயகரோ, மாற்று தலைவர்களோ சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை நடத்துவார்கள் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

# ஜவாஹிருல்லாவின் ஓராண்டு சிறையை உறுதி செய்த சென்னை ஐகோர்ட்டு



சென்னை, மார்ச்.16

கடந்த 1997 டிசம்பர் 15 முதல் ஜூன் 20, 2000 ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக ரூ.1.5 கோடி பெற்றது தொடர்பான வழக்கில் மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா உள்ளிட்டோருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அந்தஉத்தரவைஎதிர்த்து ஜவாஹிருல்லா உள்ளிட்டோர் சென்னை மாவட்ட 6வது கூடுதல் அமர்வு கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இந்த மனுவை 6வது கூடுதல் அமர்வு கோர்ட்டு நீதிபதி கே.தனசேகரன் நேற்று விசாரித்து, ஜவாஹிருல்லா உள்ளிட்ட 5 பேருக்கும் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை உறுதிசெய்து உத்தரவிட்டார். இந்தஉத்தரவை எதிர்த்து அவர்கள் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர்.

இந்நிலையில், மனித நேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ. ஜவாஹிருல்லா உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சென்னை ஐகோர்ட்டு உறுதி செய்துள்ளது.

இதன்படி ஜவாஹிருல்லா மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த ஹைதர்அலி, சையது நிசார் அகமது, ஜி.எம். சேக் மற்றும் நல்ல முகமது களஞ்சியம் ஆகியோரின் தண்டனையை உறுதி செய்து சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டார்.

மேலும் ரம்ஜான் நோன்பு காலம் என்பதால் உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தீர்ப்பை ஒரு மாதத்துக்கு நிறுத்தி வைப்பதாக நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

# பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்

திருவண்ணாமலை, மார்ச்.16

திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.



இந்த நிலையில் மாசி மாதத்திற்கான பவுர்ணமி நேற்று காலை சுமார் 11.40 மணியளவில் தொடங்கியது. பகலில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் குறைந்தே காணப்பட்டது. பின்னர் மாலையில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. இரவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.

கிரிவலம் செல்வதற்காக தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா, கர்நாடக, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கார், வேன், பஸ் உள்ளிட்ட வாகனங்களில் திருவண்ணாமலைக்கு வந்தனர். கிரிவலம் தொடங்கும் முன்பு பக்தர்கள் அருணாசலேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் எதிரில் உள்ள 16 கால் மண்டபத்தின் எதிரில் ஏராளமானோர் கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

மேலும் கோவிலில் சாமி தரிசனம் செய்ய பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்றனர். இதனால் கோவிலில் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது. கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய ராஜகோபுரம் வழியாக அனுமதிக்கப்பட்டனர். கோவிலில் சாமி தரிசனம் செய்ய 4 மணி நேரத்திற்கும் மேலானதாக பக்தர்கள் தெரிவித்தனர். நேற்று பகலில் வெயில் வெளுத்து வாங்கியது. வெயிலையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

மேலும் கிரிவலப்பாதையில் பலர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்றவை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பவுர்ணமி இன்று (வெள்ளிக்கிழமை) மதியம் சுமார் 12.57 வரை இருந்ததால் இன்று காலை வரையில் விடிய, விடிய பக்தர்கள் கிரிவலம் சென்றபடி காணப்பட்டனர்.

அசம்பாவித சம்பவம் நடைபெறாமல் தடுக்க அங்கு தீயணைப்புத்துறையினர் தீ தடுப்பு தண்ணீர் வாகனத்துடன் தயார் நிலையில் இருந்தனர். கோவிலில் பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுதாகர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதுமட்டுமின்றி போலீசாரும் தொடர்ந்து ரோந்து பணியில் ஈடுபட்டனர். மேலும் பக்தர்கள் செல்லும் கிரிவலப்பாதையில் ஆங்காங்கே பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டனர்.

# வரம்புக்குள்தான் கடன் உள்ளது நிதித்துறை செயலாளர் பேட்டி



சென்னை, மார்ச்.16

2025,26ம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட்டை சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இன்று காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் பல்வேறு கவர்ச்சிகரமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழ்நாடு கடனில் தத்தளிக்கிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதியில்லை. நிர்வாகத்திறமையற்ற அரசு நடக்கிறது என்பதே எதார்த்த உண்மை என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இந்தநிலையில், நிதித்துறை செயலாளர் உதயசந்திரன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாடு அரசின் வருவாய் பற்றாக்குறை ரூ.41,000 கோடியாக குறையும். மாநில அரசின் கடன் வாங்கும் வரம்புக்குள்தான் உள்ளது. மத்திய அரசிடம் இருந்து பல திட்டங்களுக்கான நிதி வந்திருந்தால் இது மேலும் குறைந்திருக்கும். ஜிஎஸ்டியை பொறுத்தவரை டிஜிட்டல் சேவையில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம் என்றார்.

# 3ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது

தஞ்சாவூர், மார்ச்.16

தஞ்சாவூர் அருகே உள்ள கிராமப்பகுதியை சோ்ந்த 3ம் வகுப்பு படிக்கும் மாணவி பள்ளிக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த சின்னசாமி என்பவரின் மகன் கண்ணன் என்பவர் மாணவியிடம் பள்ளியில் இறக்கி விடுவதாக கூறி அழைத்து சென்றுள்ளார்.

பின்னர் பள்ளிக்கு செல்லாமல் அந்த பகுதியில் இருந்த காட்டுப்பகுதிக்கு மாணவியை அழைத்து சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறி உள்ளார். இதையடுத்து மாணவியின் பெற்றோர் வல்லம் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

அதன்பேரில் கண்ணனை பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது.

அதனை தொடர்ந்து இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி மற்றும் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கண்ணனை கைது செய்தனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னையில் ஹோலி பண்டிகை கோலாகலம்

சென்னை, மார்ச்.16

வண்ணங்களின் திருவிழாவான ஹோலி பண்டிகைநாடுமுழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் வடமாநிலத்தவர்கள் அதிகமாக வசித்துவரும் பகுதிகளில் ஹோலி பண்டிகை கொண்டாடப்பட்டது. சென்னையில் சவுகார்பேட்டை, பட்டாளம், வேப்பேரி உள்ளிட்ட பலபகுதிகளில் வசித்துவரும் வட மாநில பெண்கள், இளைஞர்கள், சிறுவர், சிறுமியர் பல வண்ணப் பொடிகளை ஒருவர் மீது ஒருவர் எறிந்தும், வண்ணப் பொடிகளைப் பூசியும் கோலாகலமாக ஹோலி பண்டிகையைக் கொண்டாடினர்.

# கோவை: போத்தனூர், மேட்டுப்பாளையம் செல்லும் மின்சார ரெயில் 16ம் தேதி ரத்து

கோயம்புத்தூர், மார்ச்.16

பராமரிப்பு பணிகள் காரணமாக குறிப்பிட்ட ரெயில் சேவை வருகிற 16ம் தேதி ரத்து செய்யப்படுவதாக ரெயில்வே அறிவித்துள்ளது

மேட்டுப்பாளையத்தில் இருந்து போத்தனூருக்கு காலை 8.20 மணிக்கு புறப்படும் ரெயில் (எண் 66611) வரும் 16ம் தேதி முழுமையாக ரத்து செய்யப்படும்.

★அதேபோல் போத்தனூரில் இருந்து மேட்டுப்பாளை யத்திற்கு காலை 9.40 மணிக்கு புறப்படும் ரெயில் (எண் 66612) வரும் 16ம் தேதி முழுமையாக ரத்து செய்யப்படும்.

பராமறிப்பு பணிகள் காரணமாக 16ம் தேதி மட்டும் மாற்றுப்பாதையில் செல்லும் ரெயில்கள்:

ஆலம்புழாவில் இருந்து தன்பாத்திற்கு காலை 6 மணிக்கு புறப்படும் ரெயில், (எண்13352) கோயம்புத்தூர் ஜங்ஷனை தவிர்த்து, போத்தனூர் இருகூர் வழியாக இயக்கப்படும். இந்த ரெயில் போத்தனூர் ஜங்ஷனில் மாற்று நிறுத்தத்தைக் கொண்டிருக்கும். போத்தனூர் ஜங்ஷனில் 12.17/12.20 மணி நேரங்கள் நிறுத்தப்படும்.

எர்ணாகுளம் கேஎஸ்ஆர் பெங்களூரு எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 12678) காலை 9.10 மணிக்கு புறப்படும். , கோயம்புத்தூர் ஜங்ஷனை தவிர்த்து, போத்தனூர் இருகூர் வழியாக இயக்கப்படும். இந்த ரயில் போத்தனூர் ஜங்ஷனில் மாற்று நிறுத்தத்தைக் கொண்டிருக்கும். போத்தனூர் ஜங்ஷனில் 12.47/12.50 மணி நேரங்கள் நிறுத்தப்படும்.

# தற்கொலை செய்து கொண்ட டாக்டர் குடும்பம்: பைனான்சியருக்கு போலீசார் வலை



சென்னை, மார்ச்.16

சென்னை திருமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் டாக்டர் பாலமுருகன் (53). இவரது மனைவி சுமதி(47) சென்னை ஐகோர்ட்டில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு 18 வயதில் ஜஸ்வந்த் குமார் மற்றும் 16 வயதில் லிங்கேஷ் குமார் என்று இரு மகன்கள் இருக்கின்றனர்.

டாகர் பாலமுருகனுக்கு ரூ.5 கோடி அளவிற்கு கடன் தொல்லை இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், குடும்பத்தினர் 4 பேரும் அவரின் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்துது.

தகவல் அறிந்து போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தற்கொலை செய்து கொண்ட 4 பேரின் உடல்களையும் மீட்டு பிரேதபரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

குடும்பத்துடன் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து ஏதேனும் கடிதம் உள்ளதா? என்பது குறித்து பாலமுருகன் வீட்டில் போலீசார் தீவிர சோதனை நடத்தினர். ஆனால் கடிதம் எதுவும் கிடைக்கவில்லை. இதனைத்தொடர்ந்து, வீட்டில் இருந்து 5 செல்போன்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடுகளிலும், பாலமுருகனின் உறவினர்கள் மற்றும் ஸ்கேன் சென்டரில் பணிபுரியும் ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் கடன் தொல்லை காரணமாக பாலமுருகன் தனது குடும்பத்ினருடன் இந்த தற்கொலை முடிவை எடுத்திருக்கலாம் என்று தெரிய வந்தது. இதன்படி ஸ்கேன் சென்டர் வளர்ச்சிக்காக பாலமுருகன் ரூ.5 கோடி வரையில் வங்கியில் கடன் பெற்றுள்ளதாகவும், அதற்கு மாதம் ரூ.6 லட்சம் வரை இ.எம்.ஐ. (மாதாந்திர தவணைத் தொகை) முறையில் வட்டி கட்டி வந்ததும் தெரிய வந்துள்ளது.

மேலும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் பலரிடம் தொழிலை விரிவுபடுத்த கடன் வாங்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் எதிர்பார்த்த அளவு தொழிலில் முன்னேற்றம் இல்லாததால், கடனை திருப்பி செலுத்த முடியாமல் பாலமுருகன் தவித்துள்ளார். இதன் காரணமாக விரக்தியில் இருந்து வந்துள்ள பாலமுருகன் குடும்பத்தாருடன் தற்கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் தெரிவித்தனர்.

பாலமுருகன் வீட்டில் 4 பேருக்கு பணம் கொடுப்பதற்காக வைத்திருந்த காசோலைகளையும் போலீசார் கைப்பற்றி உள்ளனர். டாக்டர் பாலமுருகனை பார்க்க, அவரது வீட்டுக்கு பலர் வந்து போவதுண்டு. அந்த வகையில், கடன் கொடுத்தவர்கள் யாரேனும் வீட்டுக்கு வந்து மிரட்டி விட்டு சென்றார்களா? என்றும், கடந்த சில தினங்களில் டாக்டர் பாலமுருகனை யார் யார் வந்து வீட்டில் சந்தித்தார்கள்? என்பதை அறிவதற்காக குடியிருப்பு வளாகத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களில் டாக்டர் பாலமுருகன் வழக்கம் போல் பேசினாரா?, அவரது செயல்களில் மாற்றம் ஏதாவது இருந்ததா? எனவும் அவரின் வீட்டில் பணிபுரியும் வேலையாட்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அவர்கந்து வட்டிக்கு பணம் வாங்கியிருந்தாரா? அதை கொடுக்க வேண்டும் என யாரும் மிரட்டினார்களா? என்ற கோணத்திலும் விசாரணை முடுக்கி விடப்பட்டது. இந்நிலையில் டாக்டர் குடும்பம் தற்கொலை செய்த சம்பவத்தில் சிவக்குமார் என்பவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருவதாகவும், பைனான்சியர் வெற்றி என்பவரை போலீசார் வலைவீசி தேடி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
16.3.2025

# எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா



பூந்தமல்லி, மார்ச்.16

பூந்தமல்லி ஆவடி நெடுஞ்சாலையில் திருவேற்காட்டில் அமைந்துள்ள எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவை இணைச் செயலாளர் சு. கோபிநாத் தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் மாலதி செல்வக்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரித் தாளாளர் ப. வெங்கடேஷ் ராஜா வாழ்த்துரை வழங்கினார். தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் டாக்டர் இறையன்பு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இயக்குநர் முனைவர் வி. சாய் சத்யவதி சிறப்பு விருந்தினரை அவைக்கு அறிமுகப்படுத்தினார்.

விழாவில் டாக்டர் இறையன்பு பேசுகையில், "பட்டங்கள் பல பெறினும் முதல் பட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்வில் மேன்மையுற அனைவரும் தம்மை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். சமூக அறிவுடன் கூடிய தலைமைப் பண்பைப் பெற முயல வேண்டும். நுண்ணறிவைப் பயன்படுத்தி வாழ்வில் உயர வேண்டும். அறிவைப் பயன்படுத்தப் பயன்படுத்தத்தான் அது மேன்மையுறும். மேலும் இளைஞர்கள் உணர்ச்சி மேலாண்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஆலோசனை வழங்கினார். அதனைத் தொடர்ந்து 350 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்று, உறுதிமொழி ஏற்றனர். தமிழ்த்துறைத் தலைவர் மா. விஜயகுமார் நன்றியுரை வழங்கினார்.

# திருவண்ணாமலை: தொழிலாளி வீட்டில் 30 பவுன் நகை கொள்ளை

திருவண்ணாமலை, மார்ச்.16

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த ராட்டிணமங்கலம் ஈ.பி.நகர் பகுதியைச் சேர்ந்தவர் தங்கராஜ் (வயது 40), தொழிலாளி. இவர், குடும்பத்துடன் நேற்று முன்தினம் கிரிவலம் செல்ல திருவண்ணாமலைக்கு சென்றார். கிரிவலம் முடித்துவிட்டு அங்கிருந்து நேற்று காலை தங்கராஜ் குடும்பத்துடன் வீட்டிற்கு வந்தார். அப்போது கதவுகள் உடைக்கப்பட்டு கிடப்பதை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனே உள்ளே சென்று பார்த்த போது பொருட்கள் ஆங்காங்கே சிதறி கிடந்தன. மேலும் பீரோ உடைக்கப்பட்டு, அதில் இருந்து 30 பவுன் நகை மற்றும் பணத்தை மர்மநபர்கள் கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

கொள்ளைபோன நகைகளின் மதிப்பு சுமார் ரூ.15 லட்சம் இருக்கும் என்ற போலீசார் தெரிவித்தனர். இதுகுறித்து ஆரணி தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும் கைரேகை நிபுணர்கள் அங்கு சென்று தடயங்களை சேகரித்தனர். மேலும் இதுதொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கச்சத்தீவு திருவிழா; பக்தர்களை வழியனுப்பி வைத்த ராமநாதபுரம் கலெக்டர்

ராமநாதபுரம் மார்ச்.16

இந்திய இலங்கை பக்தர்களின் பாரம்பரிய உறவுத் திருவிழாவாகக் கருதப்படும் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா இன்று மற்றும் நாளை (மார்ச் 14, 15) நடைபெறுகிறது. விழாவில் பங்கேற்க இந்திய பக்தர்களுக்கு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் மறைமாவட்ட பிஷப்



அழைப்பு விடுத்தார்.

இந்த ஆண்டு கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்க இந்தியாவில் இருந்து சுமார் 3 ஆயிரத்து 414 பேர் பங்கேற்கின்றனர். திருவிழாவிற்கு செல்ல வருகை தந்த பக்தர்களை கடலோர காவல் படை அதிகாரிகள் தீவிரமாக சோதனை செய்தனர். பின்னர் அவர்கள் படகுகளில் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

# மாவட்ட தலைநகரங்களில் 23ந்தேதி உண்ணாவிரத போராட்டம்: ஜாக்டோஜியோ அறிவிப்பு




சென்னை மார்ச்.16

பழைய ஒய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ தொடர்ந்து போராடி வருகிறது. சமீபத்திலும் போராட்டம் நடந்தது. அந்த போராட்டத்தின் தொடர்ச்சியாக மறியல் போராட்டம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சென்னை தலைமை செயலகத்தில், கோரிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்த பேச்சுவார்த்தையின் முடிவில் சட்டசபை கூட்டத்தொடரில் பட்ஜெட் அறிவிப்பில், கோரிக்கைகள் தொடர்பான அறிவிப்பு இடம்பெறும் என்ற நம்பிக்கையில் மறியல் போராட்டத்தை ரத்து செய்வதாக தெரிவித்தனர்.

இதையடுத்து இன்று தமிழக பட்ஜெட் வெளியானதை தொடர்ந்து, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலக கட்டிடத்தில் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மாயவன், சேகர், பார்த்தசாரதி ஆகியோர் தலைமையில் நடந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் காந்திராஜ், தாஸ், தியாகராஜன், வின்சென்ட் பால்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதன்படி, "பட்ஜெட்டில் எதிர்பார்த்த அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றத்தை கொடுக்கிறது. எனவே கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி வருகிற 23ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாவட்ட தலைநகரங்களில் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும். அதன்பிறகும் அரசு மவுனம் காத்தால், வருகிற 30ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) அடுத்தகட்ட போராட்டம் குறித்து கூடி முடிவு செய்யப்படும்" என்பது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டதாக ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் காந்திராஜ் தெரிவித்தார்.

இதேபோல், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் பேட்ரிக் ரெய்மாண்ட் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "நீண்ட நாள் கோரிக்கையான பழைய ஒய்வூதியத் திட்டம் 20042006 தொகுப்பூதிய பணிக்காலம், இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு, ஊக்க ஊதியத்தை பழைய முறைப்படி வழங்குதல், மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் 100 சதவீத கட்டணமில்லா சிகிச்சை உறுதிப்படுத்துதல் போன்ற எதிர்பார்த்த அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றம். இது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது" என்று கூறியுள்ளார்.

# டாஸ்மாக் முறைகேடு புகார்; அமலாக்கத்துறை குற்றச்சாட்டுக்கு கனிமொழி எம்.பி. பதில்



சென்னை, மார்ச்.16

சென்னையில் உள்ள தமிழகஅரசின் டாஸ்மாக் தலைமை அலுவலகம், குடோன் மற்றும் பல்வேறு மதுபான தொழிற்சாலைகளின் அலுவலகங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்த 6 ந்தேதி அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. இந்த சோதனை குறித்து அமலாக்கத்துறை ஒரு செய்திக்குறிப்பு வெளியிட்டது.

அதில், தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1,000 கோடி ஊழல் நடந்துள்ளது என்று அமலாக்கத்துறை குற்றம்சாட்டி இருந்தது. இந்நிலையில், அமலாக்கத்துறையின் குற்றச்சாட்டு குறித்து தி.மு.க. எம்.பி. கனிமொழியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கனிமொழி எம்.பி., "அமலாக்கத்துறை எதற்காக பயன்படுத்தப்படுகிறது என்பது மக்களுக்கு தெரியும். பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் இருக்கும் அரசுகளுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய ஒரு துறையாக அமலாக்கத்துறை மாறியிருக்கிறது" என்று தெரிவித்தார்.

# திருப்பதி கோவிலில் நடிகை சம்யுக்தா மேனன் சாமி தரிசனம்



மலையாளத்தில் முன்னணி நடிகையாக வலம் வரும் சம்யுக்தா மேனன் தீவண்டி, லில்லி, கடுவா, தெலுங்கில் பீம்லாநாயக் போன்ற படங்களில் நடித்து பிரபலமானார். இவர் தமிழில் களரி திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து, தனுசுக்கு ஜோடியாக வாத்தி படத்திலும் நடித்திருக்கிறார்.

இந்நிலையில், நடிகை சம்யுக்தா இன்று திருப்பதியில் உள்ள ஏழுமலையான் கோவிலில் விஐபி தரிசனத்தில் சாமி தரிசனம் செய்தார். கோவிலுக்கு வந்த அவரை, அதிகாரிகள் வரவேற்று சாமி தரிசன ஏற்பாடுகளை செய்து வைத்தனர். ரங்கநாயக்க மண்டபத்தில் தேவஸ்தானம் சார்பில் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டன. இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் பரவி வைரலாகி வருகின்றன.

பின்னர் கோயிலுக்கு வெளியே வந்த அவருடன் ரசிகர்கள் செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# "கூலி" படத்தின் படப்பிடிப்பு புகைப்படங்களை வெளியிட்ட படக்குழு



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த்தின் 171வது படமாக கூலி திரைப்படம் தயாராகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. கூலி திரைப்படம் வருகிற ஆகஸ்ட் மாதம் திரைக்கு வர உள்ளது. இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இத்திரைப்படத்தில் ரஜினிகாந்த் உடன் சுருதிஹாசன், நாகார்ஜுனா, உபேந்திரா, சத்யராஜ், அமீர் கான் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

ரஜினி நடிக்கும் காட்சிகள் முழுவதும் படமாக்கப்பட்ட நிலையில் 'ஜெயிலர் 2' படப்பிடிப்பில் அவர் கலந்துகொண்டுள்ளார்.

இயக்குநர் லோகேஷ் கனகராஜின் பிறந்தநாளான இன்று கூலி படத்தின் டீசர் அல்லது கிளிம்ஸ் விடியோ வெளியிடப்படும் என ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இந்த நிலையில், படப்பிடிப்பில் முக்கிய நடிகர்களுடன் லோகேஷ் எடுத்த புகைப்படங்களை வெளியிட்டு சன் பிக்சர்ஸ் தயாரிப்பு நிறுவனம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

'கூலி' படத்தில் நடிக்கும் அமீர் கானுக்கும் இன்று பிறந்தநாள். அவருக்கு வாழ்த்து தெரிவித்து அவருடன் இருக்கும் புகைப்படத்தை லோகேஷ் பகிர்ந்துள்ளார்.

# "தக் லைப்" படக்குழு ஹோலி வாழ்த்து தெரிவித்து வீடியோ வெளியீடு





36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். நடிகர் அலி பசல் நடிக்கும் முதல் தமிழ் படம் இதுவாகும்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் அடுத்த ஆண்டு ஜூன் 5ந் தேதி திரைக்கு வரும் என அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியானது.

தற்போது ஹோலி பண்டிகைக்கு வாழ்த்துத் தெரிவித்து படக்குழுவினர் சிறிய கிளிம்ஸ் வீடியோவை வெளியிட்டுள்ளனர். மணிரத்னம் படங்களில் பெரும்பாலும் ஹோலி பண்டிகை சார்ந்த காட்சிகள் அல்லது பாடல்கள் இடம்பெறுவது வழக்கம். இந்தப் படத்தின் வீடியோவிலும் சிம்பு ஹோலி பண்டிகையில் ஆடுவதைப் போன்ற காட்சி இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இண்டியன்வெல்ஸ் ஓபன்: கார்லஸ் அல்காரஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) பிரான்சிஸ்கோ செருண்டோலோ (அர்ஜெண்டினா) உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்காரஸ் 6-3, 7-6(7-4) என்ற செட்கணக்கில் பிரான்சிஸ்கோ செருண்டோலோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் அல்காரஸ் கால் டிரேப்பர் (பிரிட்டன்) உடன் மோத உள்ளார்.

# சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்; இலங்கையை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது வெஸ்ட் இண்டீஸ்



முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில் ராய்பூரில் நேற்று நடைபெற்ற 2வது அரையிறுதி ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் இலங்கை அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 179 ரன்கள் எடுத்தது.

வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக ராம்டின் 50 ரன்கள் எடுத்தார். இலங்கை தரப்பில் பிரதீப், மெண்டிஸ், குணரத்னே தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து 180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் கண்ட இலங்கை வெஸ்ட் இண்டீஸின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 173 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 6 ரன் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்ற வெஸ்ட் இண்டீஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தியது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் டினோ பெஸ்ட் 4 விக்கெட் வீழ்த்தினார். நாளை ராய்பூரில் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்தியா வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோத உள்ளன.

# ஐ.பி.எல். 2025; பேட்ஸ்மேனாக களம் இறங்கும் மிட்செல் மார்ஷ்..? வெளியான தகவல்

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் இந்த வருடம் நடைபெற உள்ளது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடர் வருகிற 22ம் தேதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை எதிர்கொள்கிறது.

நடப்பு ஐ.பி.எல் தொடருக்கான லக்னோ அணியில் ஆஸ்திரேலிய 20 ஓவர் அணியின் கேப்டனும், ஆல் ரவுண்டருமான மிட்செல் மார்ஷ் இடம் பெற்றிருந்தார். ஆனால், இவர் முதுகு வலியால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் அவர் கடந்த ஜனவரி 7ந் தேதிக்கு பிறகு எந்தவித போட்டியிலும் பங்கேற்கவில்லை.

இதன்காரணமாக சாம்பியன்ஸ் கோப்பை போட்டியையும் தவறவிட்டார். இதனால் அவர் இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிக்காக விளையாடுவாரா? என்ற சந்தேகம் நிலவியது.

இந்த நிலையில் மிட்செல் மார்ஷ் ஐ.பி.எல். தொடரில் லக்னோ அணிக்காக ஒரு பேஸ்ட்மேனாக மட்டும் விளையாட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பந்து வீசினால் முதுகு வலி பிரச்சினை உருவாக வாய்ப்பு இருப்பதாக டாக்டர் அளித்த ஆலோசனையின் படி அவர் பேட்ஸ்மேனாக மட்டும் விளையாட லக்னோ அணி நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. பெரும்பாலும் அவரை 'இம்பேக்ட்' வீரராக பயன்படுத்துவார்கள் என்று தெரிகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.